2017 பிப்ரவரி 1]

திருமதி வி. கஸ்தூரி வாசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. இந்தப் பிரச்சினையை உடனடியாகப் பரிசீலனை செய்து, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

39—

பேருந்து வசதி

***3199—டாக்டர் ஆர்.டி. அரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, செய்யூரிலிருந்து கல்பாக்கம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய இமயம், தமிழர்கள் இதயம், அளவற்ற அருளாளர், நிகரற்ற அன்பாளர், பன்மொழி வித்தகர், பார்புகழ் தலைவர், பேரறிவு, பேராற்றல் இவை அனைத்தின் மொத்த வடிவம் ஒருவர், அவர்தான் 8 கோடி தமிழர்களின் மூலமந்திரம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அம்மாவிற்காக தன்னையே தந்த தியாக தீபம், கருணைக் கடல், எங்கள் தியாகத் தலைவி, சின்னம்மா அவர்களை வணங்கி எனது பதிலைப் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) செய்யூர்-கல்பாக்கம், வழி வீரம்பாக்கம், கூவத்தூர், கடலூர் கிராமம் தடத்தின் நீளம் 34 கி.மீ. ஆகும். இத்தடத்தில் நகரப் பேருந்து ஒன்றின்மூலம் தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், காஞ்சிபுரம் மண்டலத்திற்கு புதிய வழித்தடங்கள் ஒதுக்கீட்டின்போது, மாண்புமிகு இதய தெய்வம்

[2017 பிப்ரவரி 1

புரட்சித் தலைவி அம்மாவின் அரசால் இக்கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது செய்யூர் தொகுதிக்குட்பட்ட கல்பாக்கம், புதுப்பட்டினம், வாயலூர், வேப்பஞ்சேரி, காத்தான்கடை, கடலூர், கூவத்தூர், தென்பட்டினம், வடபட்டினம், முகையூர், பெருந்துறவு, சீக்கணாங்குப்பம், ஓதியூர், எல்லையம்மன் கோவில், செய்யூர், ஓணம்பாக்கம், காட்டுதேவாத்தூர், சித்தாமூர், கொளம்பாக்கம், மழுவங்கரணை, சோத்துப்பாக்கம் வழியாக மேல்மருவத்தூர் செல்வதற்காகவும், காத்தான்கடை, கடலூர், சீக்கணாங்குப்பம் பகுதியைச் சேர்ந்த மாணவ/மாணவிகள் மிகவும் சிரமத்திற்கு ஆளாவதாலும், கல்பாக்கத்தில் பணிபுரியும் தென் தமிழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் செல்வதற்கு ஏதுவாகவும், கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் பணிபுரியும் தினக் கூலியாளர்கள் பயன்பெறும் விதமாகவும், சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலையையும், தேசிய நெடுஞ்சாலையையும் இணைக்கும் விதமாக ஒரு புதிய பேருந்து வழித்தடத்தினை அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, அந்த வழித்தடத்திலே பயணம் செய்யும் பயணிகளின் அடர்வுக்கு ஏற்ப மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 பிப்ரவரி 1]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. அரசு அவர்கள்.*

திரு. ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது மக்களுடைய, குறிப்பாக மாணவிகளின் சிரமத்தைக் கருத்தில்கொண்டும், பொதுமக்களின் சிரமத்தைக் கருத்தில்கொண்டும் குறைந்தபட்சம் சிற்றுந்தையாவது அந்தப் பகுதியில் இயக்க இந்த அரசு முன்வருமா என்பதைக் கேட்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிற்றுந்து என்பது சென்னை மாநகரத்திற்குட்பட்ட பகுதிகளில் இயக்கப்படுவதாகும். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, அந்தப் பகுதியிலே பயணம் செய்யும் பயணிகளின் அடர்விற்கேற்ப, பேருந்துகளையோ அல்லது சிற்றுந்துகளையோ இயக்கத் தேவையேற்படுமாயின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜவ்வாதுமலை ஜமுனாமரத்தூரிலிருந்து திருவண்ணாமலைக்கு வரவேண்டுமென்று சொன்னால் தலைவர் கலைஞர் அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு துணை முதல்வராக இருந்த தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலோடு, அன்றைய உணவுத் துறை அமைச்சர், அண்ணன் எ.வ. வேலு அவர்களால் ஒரேயொரு பேருந்து வழித் தடம்தான் தொடங்கி வைக்கப்பட்டது.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஜவ்வாதுமலை ஒன்றியம், செங்கம் வட்டத்திற்கும், போளூர் வட்டத்திற்கும், கலசப்பாக்கம் வட்டத்திற்கும் உட்பட்ட

பகுதியாகும். அந்தப் பகுதியிலேயிருக்கும் 6 ஊராட்சிகளிலேயிருக்கின்ற மக்கள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரவேண்டுமென்று சொன்னால், அவர்கள் செங்கம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரவேண்டும். அவர்களுக்குக் கடந்த காலங்களில் சாலை வசதியில்லாமல் இருந்தது. முன்பு மாண்புமிகு துணை முதல்வராக இருந்த தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலோடு சாலை அமைக்கப்பட்டு, எட்டு ஆண்டுக் காலம் ஆகின்றது. இன்னும் அந்தப் பகுதி மக்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்படவில்லை. எனவே, ஜவ்வாதுமலைப் பகுதி மக்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மலைப் பகுதியில் பேருந்துகளை இயக்க வேண்டும் என்பதாகும். அந்தப் பகுதிகளில் இயக்கப்படுகின்ற பேருந்துகளை ஆய்வு செய்து, தேவை ஏற்படுமாயின் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தரராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

சமுதாயக் கூடம்

***9868—திரு. ஆர். சுந்தரராஜ்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—